**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் - 2018**

---

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில்முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின்ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ்,கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு,எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும்நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில்,ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின்பொறுப்பாகும். ஆணைக்குழுவைக் கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம்,ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலைவழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பனஎனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலொன்றாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது

அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர்மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்குதாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளலும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். தவறினால் ஏற்படும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் போதியளவு தவறான கூற்றுக்களை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப்புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும்உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும்மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக மன்றம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான

ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து,ஆணைக்குழுவின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப்பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது ஆணைக்குழுவின்பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க ஆணைக்குழு செயற்பட்டுள்ளதா என்றும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள்ளும் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 283,750 பெறுமதியான தலைக் கவசங்கள் மற்றும் டீசேர்ட் கையிருப்பு கணக்கிலிடப்படவில்லை. | எதிர்காலத்தில் சரிவரக் கணக்கிலிடப்படும். | சரியான கணக்கீட்டு நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | உடன்படிக்கைக்குள்ளான ஏனைய செலவினத்தின் கீழ் 2 காப்புறுதி உடன்படிக்கைகளுக்கு 2018/2019 இன் ரூபா 275,575 மொத்தத் தொகையும் 2018 ஆம் ஆண்டில் செலவினமாக காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 173,038 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலே உள்ளவாறு |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நி.பி 137 | சேவைகள், வேலைகள் வழங்கல் முடிவடைந்த அவற்றைப் பொறுப்பேற்ற அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தரால் பணி முடிவுறுத்துவதற்கு | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் 137 ஆம் நிதிப்பிரமாணத்தின் பிடி நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்னரே 2 சந்தர்ப்பங்களில் ரூபா 39,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நேர்முகப் பரீட்சைக்கு முதல் நாள் காசோலைகள் வரையப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு வருகை தந்தோருக்கு வரவு இடாப்புப் படி கொடுப்பனவு செய்யப்பட்டது. | |
| (ஆ | நி.பி 753(2) | பொருட் பெறுவனவுகள் 219 ஆம் பொதுப் படிவத்தில் அமைய வேண்டுமாயினும், ஆணைக்குழு பத்திரத்தைப் பயன்படுத்தப் படவில்லை. | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது அதற்கமைய, எதிர்காலத்தில் சரியான நடவடிக்கை எடுக்கப்படும். | பொருட் கொள்வனவின் போது நிறுவனம் அவற்றை பொருள் பெறுகைப் பத்திரங்களில் பதில் வேண்டும். |
| (இ) | நி.பி 780 | அரசாங்க வேலைகளும் சேவைகளும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் நடைபெற வேண்டுமாயினும், அதற்கு முரணாக கண்காட்சி ஒன்றிற்கு 3 சந்தர்ப்பங்களில் சிக்கமின்றி ரூபா 566,710 க்குக் கொள்வனவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் DMS/1609 ஆம் இலக்க 2017.08.23 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இப்புதிய பதவிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2017.09.18 ஆந் திகதி நடைபெ்ற நேர்முகப் பரீட்சைக்கு பெறுபேறுக்கமைய ஆட்சேர்ப்புக்கு ரூபா 2,000 படி வழங்குவதற்கு ஆளுனர் சபையின் 2017(6)-16-4(i) பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ரூபா 2,000 படியாக | அரச நிறுவனம் ஒன்று செலவு மேற்கொள்கையில் சிக்கனமும் வினைத்திறனும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கப்படுவதற்கும் ஆளுனர் சபை அங்கீகாரம் அளித்திருந்தது. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையினது. ii ஆம் அத்தியாயம் 5.4.3 ஆம் பிரிவு | நேர்முகப் பரீட்சை சபையில் 3 அங்கத்தரவ்கள் இருக்க வேண்டுமாயினும், 2 சாரதிகளை ஆட்சேர்ப்பதற்கு 7 பேர் உள்ளடங்கிய சபை அமைக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் சரியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஆட்சேர்ப்பு சுயாதீனதாகவும் பட்சபாதமின்றியும் நடைபெறுவதற்கான நேர்முகப் பரீட்சைக்கமைய அமைக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

-----------------------------

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

--------------------------------

மீளாய்வாண்டினது செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 1,982,586 பற்றாக்குறை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 843,425 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 2,826,011 நலிவு அவதானிக்கப்பட்டது. அரச மானியம் ரூபா 7,071,203 அதிகரித்த போதும், நிர்வாகச் செலவினம் ரூபா 3,459,172 மற்றும் புத்தாக்குனர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் ரூபா 7,963,664 என அதிகரித்தமையே இதற்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| --------------------------------------- | -------------------------------- | -------------- |
| இலங்கையில் புத்தாக்கக் கலாசாரத்தை மேம்படுத்தல் மற்றும் நிறுவுதல் என்பவற்றிற்கான ஊடகக் கொள்கையை தயாரிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,680,000 செலவிடப்பட்டிருந்தது. 2019 | கணக்காய்வு விசாரணை மேற்கொள்ளப் படுகின்றது. | அரச நிறுவனச் செலவின் போது சிக்கனமும் வினைத்திறனும் கருத்திற் |

| | | |
|---|---|---|
| ஏப்ரல் கணக்காய்வுத் தினத்திலேனும் அந்த ஊடகக் கொள்கை பயன்பாட்டுக்கு வரவில்லை. | | கொள்ளப் படவில்லை. |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

---

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 பெப்ரவரி மாதமளவில் நிலவிய நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் பதவி மற்றும் முகாமைத்துவ உதவியார் பதவி ஆகிய இரண்டுடன் 2018 ஒக்தோபர் 04 ஆந் திகதியளவில் வெற்றிடமாகிய நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் பதவியும் அடங்கலாக 03 வெற்றிடங்கள் நிலவின. 2018 ஆம் ஆண்டில் நிதியேற்பாட்டில் ஆட்சேர்க்கும் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகாரம் வழங்கியபோதும், 2019 மே மாதமளவிலும் ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை. | யூன் மாதத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். | அங்கீகாரம் கிடைக்காமையால் வெற்றிடத்தை துரிதமாக நிரப்ப வேண்டும். |
| (ஆ) அதிகாரச்சட்டத்தில் உள்ள தேவைகளுக்கேற்ப புத்தாக்குனர் நிதியத்தின் கீழ் கடன் வழங்கும் போது தகைமைகள் பூர்த்தி செய்யப்படுகின்றது. நவ நிபெயும் திரிய எனும் பெயரில் 2016 முதல் உதவிப் பணம் வழங்கும் செயற்திட்டத்துக்காக 2016 முதல் 2018 வரை ரூபா 52,800,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூபா 24,031,564 கொடுப்பனவு | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் திருத்தப்படும். | கொடுப்பனவுக்கு முன்னர் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டுமிருந்தது. புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவினது (1) மற்றும் (2) என்பவற்றின் பிரகாரம் நவ நிபெயும் திரிய செயற்திட்டத்திற்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரமும் அமைச்சின் அங்கீகாரம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (இ) நல நிபெயும் திரியவின் கீழ் வழங்கப்பட்ட கடனில் உற்பத்தியாளரது உற்பத்தி தொடர்பான அறிக்கைகள் இல்லாத போது அவற்றை ஆணைக்குழு தொடர்ந்து பரிசீலிக்காத சந்தர்ப்பங்களும் ஏற்பட்ட முன்னேற்றம் தொடர்பான அறிக்கை இல்லாத சந்தர்ப்பங்களும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. | நிதியம் வழங்கும் உதவியும் கடனும் முறையான விதிமுறைப்படி தயாரிக்கப்பட்டு உள்ளூர் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | வழிங்கப்பட்ட கடன் உதவி பணம் என்பவற்றினது செயலாற்றல் தொடர்ந்து பரிசீலிக்கப் படவில்லை. |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் 09 ஆண்டுகளாக முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் தீர்வு செய்யப்படாததும் உறுதிப்படுத்தப்படாததுமான ரூபா 9,802,964 கடனுக்கு நூறுவீத ஐயக் கடன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவற்றைத் தீர்வு செய்யாது பதிவழிப்பதற்கு அமைச்சின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. | குறித்த புத்தாக்குனர்களைக் கண்டறிந்து மீதியைப் பதிவழிப்பதற்கு முறைப்படி எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பணம் அறவிடப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

### 3.4.1 சகஸக் நிமெவும் கண்காட்சிக்கான டீ சேர்ட் கொள்வனவு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து 1270 ரீ சேட்டுக்கள் ரூபா 998,450 செலவில் கண்காட்சிக்கென கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்நிறுவனம் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை வழிகாட்டிக்கமைய தெரிவு செய்யப்படவில்லை. | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தற்போது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு முறையான பொருட் கொள்வனவு வழிகாட்டியின் படி செயற்படுகின்றது. | பொருட்களும் சேவைகளும் கொள்வனவு செய்யப்படும் போது அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டி பின்பற்றப்பட வேண்டும். |

### 3.4.2 புதிய உற்பத்திகளை துரிதப்படுத்துவதற்கான நிதியம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை புத்தாக்குனர்களது புதிய உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் அவற்றைத் துரிதப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்திற்கும் சமூகத்திகும் வழங்கும் நோக்குடன் புத்தாக்குனர்களது கடன் வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டின் வரவு, செலவுத் திட்டத்தில் ரூபா 100 மில்லியன் நிதிஏற்பாடு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனைச் செயற்படுத்தும் மதியுரைச் | மதியுரையாளரது சேவையைப் பெறுவதற்கு பொருட் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டது. எனினும், முழு நடவடிக்கைகளும் குறைபாடுகள் இருந்தமையை ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்வரும் | அரசாங்க சட்டங்கள், விதிகள் என்பவற்றுக் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை உத்தியோகத்தர் இனங்காணப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | சேவைகளைப் பெறுபவர்களுக்குரிய பொருட் கொள்வனவு விதிமுறைகளைக் கடைப்பிடிக்காது மதியுரை நிறுவனம் ஒன்றின் சேவை பெறப்பட்டிருந்தது. குறித்த மதியுரை நிறுவனத்திற்கும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுக்குமிடையே 2017 நவம்பர் 01 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அச்சமயத்தில் அந்த நிறுவனம் பதிவு செய்யப்படாத --- இருந்தது. | நிதியாண்டில் நடைபெறவுள்ள நிகழ்ச்சித் திட்டங்களில் இவ்வாறான குறைபாடுகள் இருக்க மாட்டாது. | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழு மற்றும் ஆணைக்குழுவால் நேரடியாகச் செய்ய வேண்டிய 3 பணிகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட மதியுரையாளர் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். | அத்தெரிவுக்கான குறித்த நோக்கு தயாரிக்கப்படுகையில் சட்டபூர்வமானதென உறுதி செய்யப்படுவது கவனத்திற் கொள்ளப்படாமை குறைபாடாகக் காட்டப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவை தவிர்க்கப்படும். | நிறுவனம் நிறைவேற்ற வேண்டிய பணிகளைச் சரிவர இனங்கண்டு உடன்படிக்கை செய்ய வேண்டும். இது துரிதமாக திருத்தப்பட வேண்டும். |
| (இ) | உடன்படிக்கையின் 8, 12 ஆம் இலக்கப் பிரிவுகளின் பிரகாரம் தரவு முறைமையை தயாரிப்பது மதியுரை நிறுவனத்தின் பணி ஆகியபோதும், அது நடைபெறவில்லை. | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | கொடுப்பனவுக்கு முன்னர் நிறைவேற்றிய பணி அதன அளவு, பிழையற்ற தன்மையாவும் தொடர்பாகத் திருப்தி அடைய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதியத்தைச் செயற்படுத்துவது தொடர்பாக மாதாந்த செயல் முன்னேற்ற அறிக்கையைப் பெற்று பின்னர் மதியுரை நிறுவனத்திற்கு கொடுப்பனவு வழங்கப்படலாமெனினும், அவ்வறிக்கையைப் பெறுவதற்கு முன்னர் முதலாவது மாதத்தில் ரூபா 385,000 வீதம் 12 மாதங்களுக்கு ரூபா 4,620,000 வழங்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் படி முதல் தவணைப் பணத்தை வழங்குவதற்கு செயல் முன்னேற்றம் எதிர்பார்க்கப் படவில்லை. உடன்படிக்கை கைச்சாத்திடுகையில் நடைபெற வேண்டுமென இணக்கம் காணப்பட்டது. இரண்டு மாத காலம் முதல் செயல்முன்னேற்றம் அறிவிக்கப்பட்டு, பின்னர் கொடுப்பனவுக்கு இணக்கம் காணப்பட்டது. ஆகவே 2017 டிசெம்பருக்குரிய மாதாந்த அறிக்கை 2018 சனவரி 04 ஆந் திகதி பெறப்பட்டது. சனவரி 05 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டது. | கொடுப்பனவுக்கு முன்னர் நிறைவேற்றிய பணி அதன அளவு, பிழையற்ற தன்மையாவும் தொடர்பாகத் திருப்தி அடைய வேண்டும். |
| (உ) | நிதி வசதிகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் 24 ஆகும். அவற்றுள் 04 விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் ரூபா 9,127,600 வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, நிதியம் புத்தாக்குனர்களுக்கு வழங்கிய கடனில் ஏறக்குறைய 50 | புதிய நிகழ்ச்சித் திட்டமாகையால் ஆரம் மூலதனச் செலவினம் அதிகரிப்பது மற்றும் தொடர்புடைய விடயம் பற்றிய ஞானமும் இருக்கவில்லை. | கொடுப்பனவுக்கு முன்னர் நிறைவேற்றிய பணி அதன அளவு, பிழையற்ற தன்மையாவும் தொடர்பாகத் திருப்தி அடைய வேண்டும். |

| | | |
|---|---|---|
| சதவீதம் மதியுரை நிறுவனத்திற்கு மதியுரைக் கட்டணமாக வழங்கப்பட்டிருந்தது. | மேலும, இரண்டாவது ஆண்டிலிருந்து மதியுரை நிறுவனம் இல்லாது ஆணைக்குழு செலவைக் குறைந்துள்ளது. முதலாவது ஆண்டில் ஏற்பட்ட குறைபாடு தவிர்க்கப்பட்டு ஆணைக்குழுவின் உத்தியோகத்தர் களுக்கு பயிற்சி வழங்குவதற்கும் எதிர்பார்க்கப் படுகின்றது. | |

### 3.4.3 சகஸக் நிமெவும் கண்காட்சி 2018

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு வருடாந்தம் ஏற்பாடு செய்யுமட தேசிய புத்தாக்குனர் கண்காட்சி ஆகிய “சகஸக் நிமெவும் கண்காட்சி” 2018 செப்டம்பர் 14 முதல் 16 வரை நடைபெற்றது.<br><br>கண்காட்சிக்கு இடத்தை ஏற்பாடு செய்கையில் அரசாங்க பொருள் கொள்வனவு வழிகாட்டிக் கோவை கண்டுபிடிக்கப்படாத வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் பதிவுத் தபால் மூலம் கேள்விகளைக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கேள்விகள் திறக்கப்படும் போது பொருட் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அரசாங்க நடவடிக்கைகளுக்கு சேவைகளையும் வழங்கலையும் பெறும்போது அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டி கடைக்கப்பிடிக்கப் பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சஹசக் நிமெவும் 2018 கண்காட்சியில் அச்சிடல் மற்றும் இலத்திரனியல் ஊடக பிரசார நடவடிக்கைகளுக்கு தனியார் நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டு ரூபா 2,650,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதில் ரூபா 1,250,000 தினமின, தினகரன், டெய்லி நியூஸ், லங்காதீப, டெய்லிமிரர் ஆகிய புதினப்பத்திரிகை விளம்பரங்களானவை புதினப் பத்திரிகைப் பிரசார விளம்பரங்களை உருவாக்குவது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவால் நடாத்தப்பட்டதால் அதனைப் புதினப் பத்திரிகைகளில் பிரசுரிப்பபதற்கு இடைத்தரகர் ஒருவருக்கு ரூபா 1,250,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இப்பணியை நிறைவேற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் கடமைகளுள் புதினப் பத்திரிகைப் பிரசுரமும் ஒன்றாகும். ஆகவே, அது அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் நிறுவனம் நேரடியாக செய்யக்கூடிய வேலைகளும் பணிகளும் பதவியணியினரால் மேற்கொள்ளப்படும். | அரசாங்க செலவினத்தின் போது சிக்கனமும் வினைத்திறனும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

---

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் உள்ளடங்கிய பணிகளுள் ரூபா 11,000,000 பெறுமதியான | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | சாத்தியமான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு திட்டமிடப்பட்ட பணிகள் நிறைவேற்றப் |

| | | | |
|---|---|---|---|
| | மர பணிகள் நடைபெறவில்லை. | | படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளுர் மற்றும் சர்வதேச பேடன்ட் விண்ணப்பங்கள் 500 பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கு உதவி வழங்குவது ஆணைக்குழுவின் இலக்காக இருந்த போதும், ஆண்டின் போது 60 உள்ளுர் மற்றும் 03 சர்வதேச பேடன்ட் மாத்திரமே உதவி பணிக்கமர்த்தப் பட்டிருந்தன. | பேடன்ட் அனுமதிப் பத்திரங்களைத் தயாரிப்பதற்கு அபிவிருத்திப் பிரிவு அமைக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டிலாகும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினூடாக ஆட்சேர்ப்புக்கு அங்கீகாரம் கோரப்பட்டபோதும், உதவிப் பணிப்பாளரையும் முகாமைத்துவ உதவியாளரையும் ஆட்சேர்ப்பதற்குத் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, இலக்கை அடைய முடியவில்லை. எனினும், இதுவரை உள்ள பதவியணியினரையும் நிறுவன முகாமைத்துவ உதவியாளர்களையும் பயன்படுத்தியவாறு 33 பேடன்ட் அனுமதிப்பத்திரம் வினைத்திறனுடன் 2019 மே மாதமளவில் நிறைவடைந்துள்ளன. பேடன்ட் தயாரிப்பதற்கு 02 சட்ட உத்தியோகத்தர்களைக் கோரியுள்ளதுடன் அதற்காக ஆட்டு சமர்ப்பித்த பின்னர் வினைத்திறனுடன் நடைபெறும். | சிறந்த சாத்தியக் கூறுத் திட்டம் தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலமட்ட நிர்மாணத்திறன் மற்றும் புத்தாக்க உயர்ச்சிக்கு 50 செயற்திறன் உள்ள உற்பத்திக் குழுக்களை மேம்படுத்த இலக்கிடப்பட்ட போதும், இதன் பொருட்டு 2018 ஆம் ஆண்டில் 01 குழுவே அமைக்கப்பட்டிருந்தது. | 2019 மே மாதமளவில் 03 புத்தாக்குனர் சமூகக் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆளுனர் சபை அங்கீகாரத்துடன் புத்தாக்க ஊக்குவிப்புக்குத் தேவையான நிதி ஏற்பாட்டை வழங்கவும் புதிய இளம் புத்தாக்குனர்களை உருவாக்குவதற்கும் பிரபலப்படுத்துவதற்கும் முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சாத்தியமான திட்டம் தயாரிக்கப்பட்டு இலக்கை அடைவதற்கு முன்னுரிமை வழங்கப்படும். |